**OS NO.124/2017** **Date: 15.04.2025**

**மனோகரன் (DW1)**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என்னுடைய மகன் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதி என்னுடைய மகன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆவணங்கள் எழுதும் போது உதயன், ரகுபதி, சிவகுமார் ஆகியோர் உடன் இருந்தார்கள். மேற்படி நபர்கள் மேற்படி ஆவணங்களில் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளனர். ரகுபதி என்பவர் நான் பணிபுரிந்த காவல் துறையில் வேலை பார்த்தவர். சிவகுமார் என்பவர் கொசவன் புதூரை சேர்ந்தவர். தற்போது மேற்படி நபர்களிடம் பேச்சுவார்த்தையில் உள்ளேனா என்றால் எப்போதாவது பார்த்தால் பேசுவோம். மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட காலக்கட்டத்தில் தான் வாதி என்னிடம் ரூ.21,00,000 கடன் வாங்கினார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 என்னால் வழங்கப்பட்ட குற்ற முறையீடு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முன்னிலைக்கான தொகை என்னால் 2ம் பிரதிவாதிக்கு கடனாகவும் பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 முன்னிலைக்கான தொகை ஒப்பந்தத்தின் முன்னிட்டு கிரயத்தின் பகுதி பணமாகவும் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது வேறு பணம், இது வேறு பணம் ஆகும். பி.வா.சா.ஆ–5 மற்றும் 6 ஆகிய பரிவர்த்தனைகள் சொத்து தொடர்பாக ஏற்பட்டவை. நான் 2ம் பிரதிவாதிக்கு கடன் தான் கொடுத்தேன். வாதி தரப்பில் உதயன் மற்றும் உதயகுமார் ஆகியோர் சாட்சியாக விசாரித்தார்கள். அவர்கள் தான் நான் கொடுத்த புகாரிலும் சாட்சிகளாக உள்ளனர். வாதி இவ்வழக்கில் என்ன சாட்சி சொல்லியுள்ளார் என்று படித்து பார்த்தேன். வாதி தன் சாட்சியத்தில் கொடுக்கப்பட்ட பணம் 2ம் பிரதிவாதியை ஒரு நாளும் சென்று அடையவில்லை என்று கூறியுள்ளார் என்றால் அந்த பணம் 2ம் பிரதிவாதிக்கு சென்றடைந்தது என்பது வாதிக்கு தெரியும். பி.வா.சா.ஆ–5 மற்றும் பி.வா.சா.ஆ–6 ஒப்புதல் பத்திரங்களை நவீனுக்கு கொடுக்காமல் நான் ஏன் வைத்துக்கொண்டேன் என்றால் ரமேஷுக்கு நான் பணம் கொடுத்துவிட்டதால் என்னுடைய சாட்சியத்திற்காக

அதை வைத்துக்கொண்டேன். அவ்வாறு ஒரு ஒப்புதல் பத்திரம் பெற்றுள்ளேன் என்ற விவரத்தை நவீனுக்கு சொன்னேனா என்றால் சொன்னேன். வாதி தனது சாட்சியத்தில் என் தகப்பனார் பணத்தை ரமேஷுக்கு செலுத்தியதாகவும் ஒப்புதல் பத்திரம் எழுதி வாங்கியதாகவும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நானும் வாதியும் ஒரே முகவரியில் வசித்து வருகிறோம் என்றால் ஒரே முகவரியில் தனித்தனியாக வசித்து வருகிறோம். பணம் கொடுத்த உடனேயே ஏன் கிரய பத்திரம் முடித்துக்கொள்ளவில்லை என்றால் முதலில் ரூ.20,50,000/- கொடுத்துவிட்டு மீதமுள்ள ரூ.3,45,000/- கொடுப்பதற்கு முன்பு பவர் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார். பி.வா.சா.ஆ.8ல் உள்ள 3 ரசீதுகளில் முத்திரைவில்லை ஒட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.8 சட்டப்படி சட்டப்படி ஏற்கதக்கது இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 இந்த வழக்கிற்காக பொய்யாக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ–6 ஆவணத்திற்கும் வழக்கில் நான் சொல்லும் ஒப்பந்தத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரத்தை இரத்து செய்த போது 2ம் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பியதற்கு நான் பதில் அனுபப்பினேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ–5, பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ–8 ஆகிய ஆவணங்கள் தற்போது ஏறப்படுத்தப்பட்டவை என்பதால் தான் வாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்கும் படி நான் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–7 மூலமாக எனக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகையை கொடுக்காததால் அது குறித்து நான் குடியாத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. உதயன், நான், என் மகன் ஆகியோர் சேர்ந்து எவரஸ்ட் நிதி நிறுவனம் நடத்தி வந்தோம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி எவரஸ்ட் நிதி நிறுவனத்திலிருந்து பெற்ற கடன் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை நான் என்னுடைய வசதிக்காக ஒப்பந்த பத்திரமாகவும், ஒப்புதல் ஒப்பந்த பத்திரமாகவும், 3 ரசீதுகளாகவும்

திரித்து பொய்யாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரே விலாசத்தை சேர்ந்த தகப்பனும், மகனும் ஆகிய நானும் வாதியும் 2ம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பெற்ற கடனை ஒப்பந்த பத்திரமாக காட்டி பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் ஒப்பந்த பத்திரம் பற்றி தெரிந்ததாக சொல்லும் உதயன், உதயகுமார் ஆகியோரிடம் சாட்சியாக விசாரித்த போது மேற்படி ஆவணங்களை காட்டி என் தரப்பில் குறிப்பாக குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் தற்போது உற்பத்தி செய்யப்பட்டவை என்பதால் தான் அவ்வாறு குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் ஆவணங்களில் சாட்சி கையொப்பம் போட்ட நபர்களில் ஒருவரான ரகுபதி வேலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட வழக்கில் என்னை சாட்சியாக விசாரிக்க கோரி குற்ற முறையீட்டு வழக்கில் காட்டப்பட்ட முகவரியில் எனக்க அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றும் அதில் நான் ஆஜராகவில்லை என்றால் எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை. நான் காட்பாடியில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதியின் மீது நான் ஒரு புகார் கொடுத்து மேற்படி காசோலை வழக்கு நாளது தேதிவரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது நண்பர் உதயகுமார் ஒரு வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கானது குடியாத்தம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இவ்வாறு பல வழக்குகளை 2ம் பிரதிவாதியின் மீது போட்டு அவரது குரல்வளையை நெருக்குவதே எனது வழக்கம் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)